


**Revision Test Batch Strats On Coming Sunday (4/8/24)**
**For More Details : WHATSAPP - CLICK HERE**

# ஏழாம் வகுப்பு தமிழ் இயல் – 5

1.பாரதிதாசன் தன் தமிழ்ப்பேறு எனும் கவிதையில் ஆடும் மயிலை எதற்கு உவமையாகக் கூறியுள்ளார்?

அ)குழந்தைகள் ஆ)பெண்கள்
இ)சிறுமிகள் ஈ)ஆண்கள்

2.பாரதிதாசன் எழுதிய நூல்களில் அல்லாதது எது?

அ)குறிஞ்சித்திட்டு ஆ)இசையமுது
இ)கண்ணகிபுரட்சிக் காப்பியம் ஈ)இவற்றில் எதுவுமில்லை

3.சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க.

1.பாரதிதாசன் கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்.
2.கதை, கவிதை, கட்டுரை, நாடகம் ஆகியவற்றைப் படைப்பதில் வல்லவர்.
3.பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்டவீடு முதலிய நூல்களை எழுதியுள்ளார்.
4.பாரதிதாசன் 1969-ல் பிசிராந்தையார் எனும் நூலுக்காக சாகித்ய அகாடமி விருதைப் பெற்றார்.
5.இவர் புதுச்சேரியைச் சேர்ந்தவர்.

அ)அனைத்தும் சரி ஆ)1,2,3,4 மட்டும் சரி
இ)1,2,3 மட்டும் சரி ஈ)1,2,3,5 மட்டும் சரி

4.பாரதிதாசனின் சாகித்ய அகாடமி விருது பெற்ற பிசிராந்தையார் என்பது

அ)கவிதைபடைப்பு ஆ)கட்டுரை
இ)நாடகநூல் ஈ)புதினம்

5. “துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை உண்டாகிடும் வீரம் வரும்!” என்ற வரிகள் மூலம் எதனைப் பெறுவதன் மூலம் துன்பங்கள் நீங்கிவிடும் என்று பாரதிதாசனார் பாடுகிறார்?

அ)செல்வம் ஆ)உழைப்பு
இ)கல்வி ஈ)வீரம்

6.பொருத்துக

எத்தனிக்கும் - 1.வயல்
வெற்பு – 2.மலை
பரிதி – 3.முயலும்
கழனி – 4.சூரியன்

அ)1 2 4 3 ஆ)4 3 1 2

இ)3 2 1 4 ஈ)3 2 4 1

7.பின்வருவனவற்றுள் சமம் என்பதைக் குறிக்கும் சொல்
அ)அன்னதோர் ஆ)நிகர்
இ)தோள் ஈ)கவி

8.துயின்றிருந்தார் - பிரித்து எழுதக் கிடைப்பது
அ)துயின்று +இருந்தாள் ஆ)துயில் +இருந்தார்
இ)துயின்றி+ இருந்தார் ஈ)துயின்று+ இருந்தார்

9.பெற்றோர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வங்களுள் சிறந்ததும், அழியாததும் ஆகிய செல்வமாக சமண முனிவர் எதனைக் கூறுகிறார்?
அ)புகழ் ஆ)அன்பு
இ)உறவுகள் ஈ)கல்வி

10. "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை" என்ற அடிகளில் எதனை பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது என்று கூறப்பட்டுள்ளது?
அ)செல்வம் ஆ)புகழ்
இ)விச்சை ஈ)பொருள்

11.வவ்வார் - இச்சொல்லின் பொருள் யாது?
அ)கற்றவர் ஆ)கவரமுடியாது
இ)கல்லாதவர் ஈ)ஒருவரால் கொள்ளப்படாது

12. "எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற்று அல்ல பிற" - இவ்வடியில் எச்சம் என குறிப்பிடப்படுவது?
அ)செல்வம் ஆ)களவு
இ)களவுபொருள் ஈ)அணிகலன்

13.தவறான கூற்றைத் தேர்வு செய்க – நாலடியார்
அ)நாலடியார் சமண முனிவர் ஒருவரால் எழுதப்பட்ட நூலாகும்.
ஆ)இந்நூல் பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.
இ)இது நானூறு வெண்பாக்களைக் கொண்டது.
ஈ)இந்நூலை நாலடி நானூறு என்று அழைப்பர்.

14.வேளாண்வேதம் என்று அழைக்கப்படும் நூல் எது?
அ)திருக்குறள் ஆ)நாலடியார்
இ)முக்கூடற்பள்ளு ஈ)கலித்தொகை

15. “கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு
மிகஎளிது கல்வி யென்னும்
உள்ளபொருள் உள்ளிருக்கப் புறத்தேயோர்
பொருள்தேடி உழல்கின் றீரே” இப்பாடல் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்
அ)நாலடியார் ஆ)பாரதிதாசன் கவிதைகள்
இ)பாரதியார் கவிதைகள் ஈ)தனிப்பாடல் திரட்டு

16.நாலடியார் எந்நூலுக்கு இணையாக வைத்து போற்றப்படுகிறது?
அ)சிலப்பதிகாரம் ஆ)மணிமேகலை
இ)திருக்குறள் ஈ)இவற்றில் எதுவுமில்லை

17.வாய்த்தீயின் - பிரித்து எழுதக் கிடைப்பது
அ)வாய் +தீயின் ஆ)வாய்த்து+ தீயின்
இ)வாய் + ஈயின் ஈ)வாய்த்து +ஈயின்

18.கல்வியறிவு இல்லாதவர்களை விலங்குகள் என்று கூறுபவர் யார்?
அ)சமணமுனிவர் ஆ)பாரதிதாசன்
இ)திருவள்ளுவர் ஈ)கம்பர்

19.நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்கு கோயில் என்று பெயர் வைத்தவர்
அ)பாரதியார் ஆ)பாரதிதாசன்
இ)வள்ளுவர் ஈ)கம்பர்

20.வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்
வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது.......” இவ்வடியில் குறிப்பிடப்படுவது
அ)பெருமை ஆ)கல்வி
இ)நேர்மை ஈ)உண்மை

21.நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இவ்வடியில் குறிப்பிடப்படும் நூல்கள் யாவை?
அ)திருக்குறளும் கம்பராமாயணமும்
ஆ)நாலடியாரும் சிலப்பதிகாரமும்
இ)திருக்குறளும் மணிமேகலையும்
ஈ)திருக்குறளும் நாலடியாரும்

22. “பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம். எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்” என்று பாடியவர்
அ)புரட்சிக்கவிஞர் ஆ)பாவேந்தர்
இ)மகாகவி ஈ)சுரதா

23.திருக்குறள் வகுப்புகள் நடத்தியும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப் பரப்பும் பணி செய்தவர்
அ)இரா.இளங்குமரனார் ஆ)மா.பொ.சிவஞானம்
இ)வீ.முனிசாமி ஈ)திரு.வி.க.

24.சிந்தனைக் களஞ்சியம் என்னும் நூலின் ஆசிரியர்
அ)பாரதிதாசனார் ஆ)திரு.வி.க.
இ)வீ.முனிசாமி ஈ)சுப்ரபாரதிமணியன்

25.சுப்ரபாரதிமணியன் எழுதிய நூல்களில் அல்லாத ஒன்றைத் தேர்வு செய்க
1.பின்னல் 2.தண்ணீர் யுத்தம் 3.திருக்குறளில் நகைச்சுவை 4.கதைசொல்லும் கலை 5.வேட்டை
அ)4 ஆ)3 இ)2 ஈ)5

26.காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம்
அ)கல்வி ஆ)காலமறிதல்
இ)வினையறிதல் ஈ)மடியின்மை

27.வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி ஆகிய நூல்களை இயற்றியவர்
அ)வீ.முனிசாமி ஆ)சுப்ரபாரதிமணியன்
இ)ம.பொ.சி ஈ)நாமக்கல்கவிஞர்

28.சுப்ரபாரதிமணியன் எக்கருத்துக்களை வலியுறுத்தி தம் படைப்புகளை எழுதியுள்ளார்?
1.குழந்தைத்தொழிலாளர் ஒழிப்பு 2.இயற்கை வளங்கள் பாதுகாத்தல்
3.பெண்கல்வி 4.வறுமை ஒழிப்பு
அ)இவையனைத்தும் ஆ)1,2 மட்டும்
இ)1,3,4 மட்டும் ஈ)3,4 மட்டும்

29.சுப்ரபாரதிமணியன் நடத்தும் இதழ் யாது?
அ)யுத்தம் ஆ)பகல்
இ)வேட்டை ஈ)கனவு

30.திருக்குறளார் வீ.முனிசாமி எதன் மூலம் மக்களைக் கவர்ந்தவர்?
அ)பேச்சாற்றல் ஆ)கவிதைபடைப்புகள்
இ)நாடகம் ஈ)நூல்கள்

31.பவணந்தி முனிவர் கூறும் ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை
அ)நாற்பத்தொன்று ஆ)நாற்பத்திரண்டு
இ)நாற்பத்துமூன்று ஈ)நாற்பத்தேழு

32.ஓரெழுத்து ஒரு மொழிகளில் இரண்டைத் தவிர மற்றவை அனைத்தும்
அ)நெடில் எழுத்துகள் ஆ)குறில் எழுத்துகள்
இ)உயிர் எழுத்துகள் ஈ)உயிர்மெய் எழுத்துகள்

33.ஓரெழுத்து ஒருமொழியில் இடம் பெற்றுள்ள குறில் எழுத்துகள்
அ)நொ, பு ஆ)மொ, து
இ)நொ, து ஈ)தொ, மு

34.தமிழில் உள்ள ஓரெழுத்து ஒருமொழிகள் குறிப்பிடப்பட்டுள்ள நூல் எது?
அ)தொல்காப்பியம் ஆ)இலக்கணவிளக்கம்
இ)சூடாமணி நிகண்டு ஈ)நன்னூல்

35. 'கூ' என்னும் ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள் யாது?
அ)வான் ஆ)கொடு
இ)இறந்துபோ ஈ)பூமி

36.மேகம் எனும் பொருளில் வரும் ஓரெழுத்து ஒருமொழி யாது?
அ)நே ஆ)பே இ)மே ஈ)நோ

37.பொருத்துக
சோ – 1.நோய்
மீ – 2.அம்பு
நொ – 3.மதில்
ஏ – 4.வான்
அ)3 2 1 4 ஆ)4 3 1 2
இ)3 2 4 1 ஈ)3 4 1 2

38.கீழ்க்கண்ட சொற்களில் பகாபதம் அல்லாதது எது?
அ)நாடன் ஆ)நெருப்பு
இ)போல் ஈ)எழுது

39.தவறான இணையைத் தேர்வு செய்க.
அ)பெயர்ப்பகாபதம் - நீர் ஆ)வினைப்பகாப்பதம் - நட
இ)உரிப்பகாப்பதம் - கழி ஈ)இடைப் பகாப்பதம் - நனி

40.பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்?
அ)ஐந்து ஆ)ஆறு
இ)ஏழு ஈ)நான்கு

41.இனியன் என்பது
அ)பொருள்பெயர் பகுபதம் ஆ)சினைப்பெயர் பகுபதம்
இ)தொழில் பெயர் பகுபதம் ஈ)பண்பு பெயர் பகுபதம்

42.பகுபத உறுப்புகள் மொத்ததம் எத்தனை?
அ)நான்கு ஆ)ஐந்து
இ)ஆறு ஈ)ஏழு

43.பகுதிக்கும் விகுதிக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து எவ்வாறு அழைக்கப்படும்?
அ)இடைநிலை ஆ)சாரியை
இ)சந்தி ஈ)விகாரம்

44.எவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்?
1.பகுதி 2.இடைநிலை 3.சந்தி 4.விகுதி
அ)இவையனைத்தும் ஆ)1,2,3 மட்டும்
இ)1,3,4 மட்டும் ஈ)1,2 மட்டும்

45.வந்தனன் - வா(வ) +த்(ந்) +த் +அன் +அன்
இங்கு அடிக்கோடிட்ட 'அன்' என்பது
அ)ஆண்பால் வினைமுற்று விகுதி
ஆ)விகுதி
இ)விகாரம்
ஈ)சாரியை

46.கீழ்க்கண்டவற்றில் எது படர்க்கை பெயர் அல்ல?
அ)எம் ஆ)அது
இ)இவன் ஈ)அவர்

47.இவர்தான் உங்களின் ஆசிரியர் - இத்தொடரில் முன்னிலைப் பெயரை தேர்வு செய்க
அ)ஆசிரியர் ஆ)இவர்
இ)உங்கள் ஈ)தான்

48.Moral என்பதன் கலைச்சொல் யாது?
அ)விளக்கம் ஆ)உண்மை
இ)சீர்மை ஈ)நீதி

49.பை என்ற சொல்லின் பொருள் யாது?
அ)இளமை ஆ)பசுமை
இ)அழைத்தல் ஈ)மெதுவாக

50.தன்னையும், முன்னால் இருப்பவரையும் அல்லாமல் மூன்றாமவரைக் குறிப்பது

அ)தன்மை ஆ)முன்னிலை

இ)படர்க்கை ஈ)இவை அனைத்தும்

**Revision Test Batch Strats On Coming Sunday (4/8/24)**
**For More Details : WHATSAPP - CLICK HERE**

TNPSC_PRE_COACHING